விலை: 40.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 132 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 17 சனிக்கிழமை (30.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசு

### கோட்டா இணங்கியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசு ஒன்றை அமைக்க ஜனாதிபதி கோட்டா இணங்கியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

### அடுத்த சில வாரங்களில்

## எரிபொருள் பற்றாக்குறையை முடிவுக்கு கொண்டு வரலாம்

### லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த சில வாரங்களில் எரிவாயு பற்றாக்குறையை முடிவுக்கு கொண்டு வர முடியும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. 15

## சர்வகட்சி அரசுக்கான வேலைத்திட்டம் ஆரம்பம்

### அனைத்து கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஜனாதி 15

## பிரதமர் பதவியிலிருந்து மகிந்தவை நீக்கினால்

## எதிர்க்கட்சியில் அமர்வேன்

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

தனது தந்தையை பிரதமர் பதவியிலிருந்து நீக்கினால் எதிர்க்கட்சியில் அமர்வேன் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

### விலை மாற்றம்

*அன்பு வாசகர்களே!*

காகிதாதிகள் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களினதும் விலைகள் பன்மடங்கு அதிகரித்திருப்பதன் காரணமாக 01.05.2022 இல் இருந்து உங்கள் **வலம்புரி** நாளிதழின் விலை 50/= ரூபாயாகவும் **சங்குநாதத்தின்** விலை (ஞாயிறு வாரமலர்) 60/= ரூபாயாகவும் நிர்ணயிக்கப்படுகின்றது.

எமக்கு அப்பாற்பட்ட நிலைமை காரணமாக ஏற்பட்டுள்ள இவ்விலை அதிகரிப்பை ஏற்று, வழமைபோல் உங்கள் ஆதரவை வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

நிர்வாகம்
**வலம்புரி**

## மே 1,3 இல் மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

மே மாதம் முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது 15

### இடைக்கால அரசு எனும் நாடகம் அம்பலம்

## பதவிகளுக்கு அடிபணிந்து மக்கள் போராட்டத்தை காட்டிக்கொடுக்கோம்

### எதிர்க்கட்சி தலைவர் சஜித் காட்டம்

(கொழும்பு)

இடைக்கால அரசாங்கம் தொடர்பான நாடகம் அம்பலமாகியுள்ளதாகவும் பதவிகளுக்கு அடிபணிந்து மக்களின் போராட்டத்தை காட்டிக் 15

### மே 2ஆம் திகதி

## அரச பொது விடுமுறை

(கொழும்பு)

எதிர்வரும் 2ஆம் திகதி அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் மற்றும் பொது 15

### நெருக்கடியைச் சமாளிக்க

## வரியை உயர்த்துவதை தவிர வேறுவழியில்லை

### நிதி அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

இலங்கையில் பொருட்கள், சேவைகள் மீதான வற் வரியை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை என நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நாடு மிக மோசமான பொருளாதார நெருக் 15

### 'ஆவா' பெயரில்

## புதுக்குடியிருப்பில் துண்டுப்பிரசுரம்

(புதுக்குடியிருப்பு)

ஆவா குழு என்ற பெயரில் புதுக்குடியிருப்பு பகுதியில் துண்டுப்பிரசுரங்கள் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

புதுக்குடியிருப்பு ஆவா குழுவினரின் இறுதி எச்சரிக்கை என தலைப் 15

## இந்திய நிதியுதவியின் கீழ் மருத்துவ உதவிகள்



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- உடல் நலத்திற்கு → எளிய முறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சிகள்
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வுப் பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் : 30.04.2022 சனிக்கிழமை தொடக்கம் 06.05.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் : மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

அறிமுகவுரை : மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி சி. முருகானந்தவேல் அவர்கள் (தலைவர் - யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)

பயிற்சிகளை வழங்குபவர்கள் : மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி த. நந்தகுமரன், துணைப்பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணா

*வருக வருக! நலம் பெருக பெருக!*

வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்

(11133)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309

## பரீட்சை ஆணையாளராக திருமதி புனிதா ஜீவராணி



இலங்கையின் புதிய பரீட்சை ஆணையாளராக திருமதி புனிதா ஜீவ ராணி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் பிரதிப் பரீட்சை ஆணை யாளராக பதவிவகித்த திருமதி புனிதா ஜீவராணி அவர்களே பரீட்சைத் திணைக் களத்தில் பரீட்சை ஆணையாளராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.

மேலும் பிரதிப் பரீட்சை ஆணையா ளராக பதவி வகித்த எஸ். பிரணவதாசன் அவர்கள் கல்வி யமைச்சில் கல்விப் பணிப்பாளராக பதவியு யர்வு பெற்றுள்ளார்.

இவர்கள் இருவரும் தமிழ் அதிகாரி கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அராலியில் விபத்து முதியவர் படுகாயம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட் பட்ட அராலி பாலத்தடியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

பட்டா ரக வாகனம் ஒன்று காரைநகரில் இருந்து யாழ். நோக்கி அராலி வீதியூடாக பயணித்துக்கொண்டிருந்தது. இதன்போது குறித்த வாகனத்திற்கு பின்னால் முதிய வர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பின்தொ டர்ந்து வந்துகொண்டிருந்தார்.

வீதிக்கு குறுக்கே மாடு சென்றதால் பட்டா ரக வாகனம் திடீரென நிறுத்தப்பட் டது. இந்நிலையில் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த முதியவர் வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானார்.

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகி ன்றார். வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொ ண்டு வருகின்றனர். (ம-7,104)

**விற்பனைக்கு**

முட்டை இடும் ஊர்ப் பேட்டுக் கோழிகள் விற்பனைக்கு உண்டு.

(11203)

**075 999 5959**

**காணி தேவை**

இரணைமடு நீர்ப்பாசனத்திற்குட்பட்ட உறுதிக்காணி (வயல்) மற்றும் யாழ்./ கிளி. மாவட்டத்தில் நகர்ப் பகுதியை அண்மித்த குடியிருப்புக்கான காணி விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும்.
(தரகர் தேவையில்லை)

(11321)

**077 330 1798**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் கிட்டிணன் கோபாலன்
( திதி : துதியை )

### அமரர் கோபாலன் தவமணி (சகுந்தலா)
( திதி : துவாதசி )

கடந்த 03.03.2022 (வியாழக்கிழமை) மற்றும் 29.03.2022 (செவ்வாய்க் கிழமை) சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வங்களின் அந்தியேட்டிக் கிரியைகள் மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நேற்று முன்தினம் (28.04.2022) வியாழக் கிழமை பிரான்ஸ் Sarcelles இல் உள்ள அன்னார்களின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று (30.04.2022) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல. 46 AV, Pierre curie 95400, Arnonvilla, France இலும். கூவில். புலோலி தென்மேற்கு. புலோலி எனும் முகவரியில் அமைந்துள்ள அன்னார்களின் இல்லத்திலும் நடைபெற வுள்ளதனால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னார்களினது ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார்களின் மரணச்செய்தி கேட்டு நாம்
துயருற்று இருந்தவேளையில் நேரில் வந்தும்
தொலைபேசியூடாகவும் முகநூல், மின்னஞ்சல்,
RIP Book ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல்
கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
மலர் வளையங்கள், மலர் மாலைகள்
சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள் மற்றும் இன்றுவரை
எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு
நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக
மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

கூவில்,
புலோலி தென்மேற்கு, புலோலி.

(11322)

குடும்பத்தினர்
021 226 0045

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும்

# கோட்டா கோ கம வில் தொடரும் போராட்டம்

(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி கொழும்பு - காலி முகத்திடலிலும், அலரி மாளிகை வளாகத்திலும் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்ந்தும் எழுச்சியுடன் நடைபெற்று வருகின்றன.**







ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்கமும் பதவியிலிருந்து வெளியேற வேண்டும் என வலியுறுத்தி, காலி முகத்திடலில் நேற்று வெள்ளிக்கிழமை 21 ஆவது நாளாகவும் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கைக்கு அப்பால் இந்தப் போராட்டத்தில் மேலும் பல கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

கோட்டா கோ கம எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் தொடர்ச்சியாக கலந்து கொண்டு இரவு - பகலாக அரசாங்கத்திற்கு எதிராக கோஷமெழுப்பி வருகின்றனர்.

தேசியக் கொடிகளை ஏந்தியும், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்திற்கு எதிராக பதாகைகளை ஏந்தியும் பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தப் போராட்டத்தின் காரணமாக, ஜனாதிபதி செயலக வளாகம் மற்றும் அதனை அண்டிய பகுதியில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (நி-6)

## ஆர்ப்பாட்டக்காரர்கள்-பொலிஸாரிடையே வாக்குவாதம்

### அலரி மாளிகைக்கு முன்பாக பதற்றம்



(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள அலரிமாளிகைக்கு முன்பாக நேற்று கடும் பதற்றம் நிலவியது.

போராட்டக்காரர்களுக்கு இடையூறாக அலரிமாளிகைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த பேருந்து மற்றும் பார ஊர்தியை அகற்றுவதற்கு கொள்ளுப்பிட்டி பொலிஸார் முயற்சித்தபோது இவ்வாறு அமைதியின்மை ஏற்பட்டது.

குறித்த பேருந்து மற்றும் பாரஊர்தி தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் முறைப்பாடளிக்கச் சென்றிருந்தபோது, குறித்த வாகனங்களின் உரிமையாளர்கள் தொடர்பான தகவல்கள் தமக்குத் தெரியாதென கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்ததாக அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை பேருந்தை பொலிஸார் அகற்றுவதற்குச் சென்றிருந்தபோது, பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதால் அமைதியின்மை ஏற்பட்டது.

இதன்போது நடத்தப்பட்ட தாக்குதலினால், போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் காயமடைந்ததாக போராட்டத்தில் கலந்துகொண்ட ஒருவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## சிறையில் அடைக்கப்பட்ட கோட்டாபய மற்றும் மகிந்த



(மாத்தறை)

ஜனாதிபதியை பதவி விலகக் கோரி மாத்தறையிலும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு "கோட்டா கோகம காலி கிளை" என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு கிராம திறப்பு விழாவில் வண. ஓமல்பே சோபித தேரரும் கலந்து கொண்டார்.

ஜனாதிபதியும் பிரதமரும் ஒரு அறையில் அடைக்கப்பட்டிருப்பதைக் காட்டும் வடிவமைப்பும் அங்கு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தன்னெழுச்சியாக நடைபெறும் போராட்டம்; மே தினத்தன்று அரசியல்வாதிகள் வரவேண்டாம்

### காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மே முதலாம் திகதி தொழிலாளர் தினத்தன்று அரசியல்வாதிகளை அழைத்துக்கொண்டு போராட்டக்களத்திற்கு வர வேண்டாம் என இளைஞர், யுவதிகள் அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க, மே தினத்தன்று தமது கட்சியினரை காலிமுகத்திடல் போராட்டக்களத்திற்குச் செல்லுமாறு அறிவித்திருந்தார். இதனையடுத்தே போராட்டக்களத்தில் உள்ள இளைஞர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

கொழும்பு காலிமுகத்திடலில் இளைஞர், யுவதிகள் கடந்த 20 நாட்களாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எந்த அரசியல் கட்சிகளின் ஆதரவும் இன்றி இளைஞர்கள் தன்னெழுச்சியாக இந்த போராட்டத்தை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## போராட்ட களத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களுக்கான எல்லே போட்டி

## சென் பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன்



யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியில் யா/சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று வெள்ளிக்கிழமை சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி மோதியது.

வழங்கப்பட்ட 40 பந்துகளில் 27பந்துகளை எதிர்கொண்டு சகல விக்கெட்டுகளையும் இழந்து ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்றனர்.

அவ்வணி சார்பில் கபில்ரன் ஒரு ஓட்டத்தை பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி 12 பந்துகளில் இரு ஓட்டங்களைப் பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

அவ்வணி சார்பில் இனியவன், நிசான் ஆகியோர் ஒவ்வொரு ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். (4-90)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி அடுத்து சுற்றுக்குள் பாடும்மீன்




வல்வை விளையாட்டுக் கழகம் தனது 60 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டும் மறைந்த வீரர்கள் ஞாபகார்த்தமாகவும் நடத்தும் வடமாகாண ரீதியிலான 9 நபர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் ஒரு ஆட்டமானது நேற்று முன்தினம் வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து திக்கம் விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகமானது 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது.

ஜோன், ஜெரின்சன் அணி சார்பாக தலா 1 கோலும் பெற்றுக்கொடுத்தனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஜெரின்சன் (குருநகர் பாடும்மீன் அணி) தெரிவு செய்யப்பட்டார். (4-106)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2605

Search for people, places and things

**துஷ்யந்தி**

கடைசி பெட்டிக்கு முன்னுள்ள பெட்டி வலுவிழுந்து வருவதால்...



சரக்கு ரயில் எந்நேரமும் தடம் புரள வாய்ப்புண்டு....

**சபேசனா**



இளங்காற்று : வரல... வரல...



அனல் காற்று : ஆஆ... வருது... வருது...

**துளசிகா**

அடிக்கிற வெயிலுக்கு தர்பூசணி டவுசர் செஞ்சு போட்டாலும் சூடு கொறையலையே அம்மாடியோ என்ன வெயிலு...!



**பிரியதன்**

காலை முதல் மாலை வரை Phone ஐ நோண்ட வேண்டியது...



இரவு வந்தவுடன் தனிமையில் எதிர்காலத்தை பற்றி நினைத்து அழுக வேண்டியது



**ராகவ்**

மனைவியை அடிச்சவுடன் அழுதுகிட்டு அம்மா வீட்டுக்கு போனால் அன்னையிலிருந்து அவுங்க நமக்கு அடிமை..



வெளக்குமாமாறையோ, பூரி கட்டையையோ எடுத்து அடிச்சாங்கன்னா அன்னையிலிருந்து நாம அவுங்களுக்கு அடிமை

**கிருஷ்ணன்**

என்னடா இவ்ளோ வெயிலா எரியுது ???



சூரியனோட பவர் இல்லடா மரத்த வெட்டி நாம செஞ்ச தவறுல எரியுது !!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கைக்கு உதவுவதற்கான தீர்மானம்

## தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றம்

(சென்னை)

**இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு மத்திய அரசிடம் அனுமதிகோரி தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாடு சட்டப்பேரவையில் முன்வைக்கப்பட்ட தனிநபர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**



இந்தத் தீர்மானத்தை முன்வைத்து உரையாற்றிய முதலமைச்சர் ஸ்டாலின் தமிழக அரசு இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்க் முன்வந்துள்ளதாக தெரிவித்தார்.

அதற்கமைய,' 80 கோடி ரூபா பெறுமதியான 40,000 மெட்ரிக் தொன் அரிசி, 137 மருந்துப் பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்காக 500 தொன் பால்மா என்பவற்றை வழங்கத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, இலங்கை மக்களுக்கு உதவி செய்வதற்காக தனது சொந்த நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாவை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக த்மிழக எதிர்க்கட்சியின் துணைத்தலைவர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனது தீர்மானத்துக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த முதல்வர் ஸ்டாலின் தற்போது, தாம் வழங்க முன்வந்திருப்பது முதற்கட்ட உதவி என்றும், தேவையேற்படின், அடுத்தகட்டமாக உதவுவதற்கும் தமிழ்நாடு அரசு தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். (நி-6)

# மகிந்த பதவி துறக்காவிடின் பிரேரணை மூலம் தூக்குவோம்

## அத்துரலிய ரத்ன தேரர்

(கொழும்பு)

"பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலகாவிட்டால் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் ஊடாகவே அவர் பதவி விலக நேரிடும்" என அபே ஜன பலவேகய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலகாமல் நாட்டை நெருக்கடியான நிலைக்கு மாற்ற முயற்சிப்பார் என நான் நினைக்கவில்லை. பிரதமர் பதவி விலகாவிட்டால் மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட நேரிடும்" என அவர் தெரிவித்தார். (நி-6)

# மருத்துவ உதவிகளை வழங்குமாறு நியூசிலாந்திடம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளால் தோற்றம் பெற்றுள்ள மருந்துத் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு நியூ சிலாந்திடமிருந்து உதவிகளை எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்த்தானிகர் மைக்கல் அப்லிடனுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே சுகாதார அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். (நி-6)


## 31ஆம் நாள் நினைவேந்தலும் நன்றி நவிலலும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 14 | 02 |
| 06 | 04 |
| 1969 | 2022 |



### அமரர். திரு. நவரத்தினசிங்கம் வாகீசன்

B.Sc.Eng.(Hons), ACMA, PgDBM

(முன்னாள் பணிப்பாளர், SEAGULL PROPERTY DEVELOPERS (PVT) LTD)

கடந்த 02.04.2022 அன்று எங்களை விட்டு பிரிந்த அமரர். நவரத்தினசிங்கம் வாகீசன் அவர்கள் மறைந்த செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மற்றும் இணையத்தளங்களின் மூலமாகவும், மலர்வளையங்கள் வைத்தும் துயரை பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது துயர் கலந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 02.05.2022 திங்கட்கிழமை குடும்ப அங்கத்தவர்களுடன் வீட்டில் நடைபெற்று ஆத்மசாந்தி பிரார்த்தனை மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகள் மறுநாள் செவ்வாய்க்கிழமை 03.05.2022 காலை 11.00 மணி முதல் பம்பலப்பிட்டி இல. 75, லோரன்ஸ் வீதி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் நினைவஞ்சலியிலும் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பிரிவால் துயறுரும்
குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்.

(C-4261)


# இராசிபலன்

30.04.2022
சித்திரை 17, சனிக்கிழமை
அமாவாசை பின்னிரவு 2.25 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 8.45 மணிவரை

சுபநேரம் 2.58 - 4.28 மணிவரை
இராகுகாலம் 8.58 -10.28 மணிவரை
அமாவாசை விரதம்

சந்திராஷ்டமம்- பூரம், உத்தரம்.

வளவன்


மேஷம்

எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவு பலிதமுண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.


ரிஷபம்

சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், விருப்பங்கள் நின்றவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.


மிதுனம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆரோக்கியம் சீராகும்.


சிம்மம்

வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.


கன்னி

கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை, மறதியால் சிறு தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், பிரயாண பயமுண்டு.


துலாம்

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும்,திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள் ,செய்தொழில் மேன்மையுண்டு,கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்,போசன சுகமுண்டு.


தனுசு

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மகரம்

பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்,மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்,வாகன சுகமுண்டு,பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


கும்பம்

பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


மீனம்

செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர் கள், சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

குற்றவாளி பிறரையும் குற்றவாளி எனக் கருதுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலிழந்த நிலையில் காணப்படும் தொலைக்கல்வி மத்திய நிலையம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய்க்கல்வி அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக் கல்வி மத்திய நிலையத்திற்கு கணணிகள் வழங்கப்படாமையால் 5வருட காலமாக இயங்காமல் காணப்படுவதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் சுட்டிக்காட்டினார். கடந்த புதன்கிழமை குறித்த நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் எமது வலயக்கல்வி அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்திற்கு 80 கணணிகள் தேவைப்பாடாக உள்ளன. பெறுமதியான கட்டடம் கட்டியும் கணணிகள் இல்லாமையால் 5 வருடங்களாக தொலைக்கல்வி நிலையத்தை இயக்க முடியாத நிலை காணப்படுகிறது.

உரிய கணணிகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் எமது வலயத்தின் தொலைக்கல்வி மத்திய நிலையம் ஊடாக பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்களுக்கு கணணி பயிற்சி நெறி வழங்கி தொழில் வாய்ப்பிற்கு ஏற்ற வகையிலான சான்றிதழ்களை வழங்கி வைக்க முடியும் என தெரிவித்தார். (4-6-30)



கடற்தொழில் நடவடிக்கையின்போது இயற்கை அனர்த்தத்தில் சிக்கி நெடுந்தீவு கடற்பரப்பில் பலியான கடற்தொழிலாளர் ஒருவரது குடும்பத்திற்கு கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கையை அடுத்து ஒரு மில்லியன் நிதி இழப்பீடாக நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. (படம்- சிவசாந்தன்)

# 355 ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் 355 ஆசிரியர்களுக்கான நியமனங்களை வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன வழங்கி வைத்தார்.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் தலைவர் எஸ்.பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பல்வேறு பாடவிதானங்களைக் கொண்ட ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன. விவசாயம், கலை, விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் மற்றும் சமயம் உள்ளிட்ட 18 வகையான பாடவிதானங்களை கற்பிக்கும் 355 டிப்ளோமா ஆசிரியர் பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதய குமார் மற்றும் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-6-33-104)



# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் தொடர்பாடல் ஆங்கிலம் (Speech and List ening) மற்றும் கணனி அடிப்படைக் கருவி (Computer Lite racy) ஆகிய குறுகிய கால கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் க.பொ.த சாதாரணப் பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்த யாவரும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இக்கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை 07.05.2022 வரை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ் .பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-6)

# வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

((யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள தலைமை அலுவகத்தில் இருந்து கடந்த 2022.04.21 ஆம் திகதி யாழ். அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகத்தில் உள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். தற்போது காணப்படுகின்ற கொவிட் 19 நிலைமைகளின் கீழ் https:// dmtappointments. d mt. gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 0212117116 என்ற தன்னியக்கத் தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து அதற்காக தங்கள் தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன், புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொருத்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும், யாழ் மாவட்ட மோட்டார் வாகனப்போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ் மாவட்ட மோட்டார் வாகனத் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.சிவகரன் அறிவித்துள்ளார் (4-6)

# பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கியவர் கைது செய்யப்பட்டார்


(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை காரியாலயத்தில் நேற்று முன்தினம் கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரை மது போதையில் இருந்த சிற்றூழியர் ஒருவர் தலையில் தாக்கியுள்ளார். அங்கு காட்சிப்படுத்தப்பட்டு இருந்த விளம்பர பலகையையும் அவர் சேதமாக்கியுள்ளார். காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.(4-6-60)

# துவிச்சக்கரவண்டி திருட்டு

(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தைக்கு அருகாமையில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியை அல்வாய் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் திருடிக் கொண்டு சென்ற பொழுது கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரிடம் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-60)



பிரசித்திபெற்ற சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று வெள் ளிக்கிழமை காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம் - ரவிசாந்)

# விலையேற்றத்தைக் கண்டித்து வடமராட்சியில் போராட்டம்



(கரணவாய்)

வடமராட்சி வல்வெட்டித்துறை நகர்ப்பகுதியில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் வல்வெட்டித்துறை கிளையினர் இப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், எரிவாயு விலையினை அதிகரித்தல் உள்ளிட்டவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே மேற்படி போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. எரிபொருள் , எரிவாயு விலை மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க வலியுறுத்தும் பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர் கள் தாங்கி இருந்தனர். (4-6-60)



உலக புத்தக தினத்தை முன்னிட்டுச் சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் "புத்தகத் திருவிழா" நேற்று வெள்ளிக்கிழமை காலை பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அண்மையில் இயங்கி வரும் எழுதிரள் பணிமனையில் ஆரம்பமானது. (படம்:- ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் செலவு

# அருகில் உள்ள பாடசாலைகளில் பணிபுரிய ஆசிரியர்கள் கோரிக்கை

## கல்வி அமைச்சு இணக்கம்

(கொழும்பு) எரிபொருள் செலவுகள் மற்றும் தற்போதைய நிலைமைக்கு மத்தியில், அருகிலுள்ள பாடசாலையில் கடமையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு, ஆசிரியர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இணக்கம் தெரிவித்துள்ளார்.

எனினும், இவ்வாறான தொரு தீர்மானத்தை உடனடியாக அமுலாக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பு கிடைக்குமாயின், தரவுகளை மதிப்பாய்வு செய்து, இந்த நடவடிக்கையை முன்னெடுக்க முடியும் என கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். (நி-6)

## மக்கள் குரலுக்கு உடனடியாக ஜனாதிபதி செவிசாய்க்க வேண்டும்



(கொழும்பு) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக மக்களின் குரலுக்கு செவி சாய்க்க வேண்டும் என கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பிரதம பீடாதிபதிகள் கூறியது போன்று பிரதமர் தலைமையிலான அமைச்சரவை உடனடியாக நீக்கப்பட்டு இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

## திரிபோஷா உற்பத்தி மூன்று மாதங்களுக்கு நிறுத்தம்

(கொழும்பு) மூலப்பொருட்கள் பற்றாக் குறையால் திரிபோஷா உற்பத்தி மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தினால் திரிபோஷா விநியோகம் செய்யப்படுவதில்லையென குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. முதல் சில மாதங்களில் மட்டுமே தமக்கு திரிபோஷா கிடைத்ததாக கர்ப்பிணித் தாய்மார்கள் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## யாழ்ப்பாணம் மாநகர சபை

### வாகன வரி அறவீடுகளை தனியாரிடம் குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுக் கோரல் 2022-2023

மாநகர சபை எல்லைக்குட்பட்ட இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் வாகனத்தரிப்பிட கட்டண அறவீடுகளை மேற்கொள்கின்ற செயற்பாட்டினை தனியாரிடம் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது. ஆர்வம் உள்ள விண்ணப்பதாரர்கள் யாழ்.மாநகர சபையில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கேள்வியின் விபரத்தைக்** குறிப்பிடப்பட்டு மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 18.05.2022 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,000.00

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 02.05.2022 - 17.05.2022
**(மு.ப. 9.00- பி.ப.3.00 மணிவரை அலுவலக நாட்களில்)**

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 18.05.2022 மு.ப .10.00 மணிவரை

கேள்வி திறத்தல் - 18.05.2022 மு.ப.10.00 மணிக்கு

| இல | விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கக் கூடிய பிணை வைப்பு | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|
| 01 | 1. காங்கேசன்துறை வீதி-ரில்கோ சுற்று வட்டத்திலிருந்து மனோகரா திரையரங்கு வரை<br>2. ஆஸ்பத்திரி வீதி -பருத்தித்துறை வீதியிலிருந்து லைடன் காமன்ஸ் சந்தி வரை<br>3. கஸ்தூரியார் வீதி-ஆஸ்பத்திரி வீதியிலிருந்து நாவலர் வீதி வரை<br>4. மின்சார நிலைய வீதி முழுமையாக<br>5. பொன்னம்பலம் வீதி<br>6. வைரவர் கோவில் வீதி<br>7. மணிக்கூட்டு வீதி<br>8. மகாத்மாகாந்தி வீதி<br>9. பலாலி வீதி முழுமையாக (மாநகர சபை எல்லைக்குள்)<br>10. ஸ்ரான்லி வீதி முழுமையாக | 3,600,000.00 | 40,000.00 | 1 வருடம் |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். ( தொலைபேசி இல 021 221 5978)

**தலைவர், பெறுகைக்குழு**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(C-4262)



# சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானம்



## எனது 31 ஆண்டு ஆன்மிகப் போராட்டப் பாதையிலே...

**அனைத்து என் அன்புள்ளங்களே!**

கடந்த (05.04.2022) வலம்புரிப் பத்திரிகையிலே சென்ற 10 ஆம் திகதியை மாற்றம் தரும் நாள் எனக் கூறியிருந்தேன்.

**அப்படி என்ன மாற்றம்?**

அன்று தான் (10.04.2022) நம் நாட்டின் அரசியல் நெருக்கடிக்கு ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. ஜனாதிபதி அவர்கள் தற்போது அரசிலிருந்து விலகிய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் கட்சித் தலைவர்களுடனும் முக்கிய சந்திப்பொன்றை நடாத்தினார். இச்சந்திப்பு கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. அப்போது அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களும் சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதே தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு என்பதை வலியுறுத்தினார். எனவே ஐயா குறிப்பிட்ட 10 ஆம் திகதியே இன்று அரசியலில் பெரிதாகப் பேசப்படுகின்ற சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்திற்கு வித்திட்டது எனலாம். அத்துடன் காலிமுகத்திடலில் 9 ஆம் திகதி அரசுக்கு எதிராக உருவான மக்கள் தன் எழுச்சிப் போராட்டம் 10 ஆம் திகதியே கோட்டா பதவியை விட்டு விலகும் வரை என்ற ஒரு சபதத்துடன் கூடிய அகண்ட தொடர் தன் எழுச்சி மக்கள் போராட்டமாக மாற்றம் பெற்று இன்றுவரை தொடர்கின்றது.

இதைவிட 10 ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்டு 11 ஆம் திகதி காலை இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் அமெரிக்க ஜனாதிபதியுடன் மெய்நிகர் வழி ஊடாக ரஷ்யா-உக்ரைன் யுத்த நிறுத்தம் சம்பந்தமாகவும் இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலை பற்றியும் இன்னும் பல தரப்பு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

இவை அனைத்தும் ஐயா கூறிய 10 ஆம் திகதியிலேயே ஏன் நடைபெற வேண்டும். ஈசுர விநாயகரின் தெய்வீகத்தை எப்படிக் கூறுவேன்?

**நினையுங்கள்! சிந்தியுங்கள்!! தெளியுங்கள்!!! உணருங்கள்!!!!**

எனது அன்றைய முக்கிய கோரிக்கை கொழும்பு அரசியலில் சூறாவளி ஏற்பட வேண்டும் என்பதாகும். 17 ஆண்டுகளுக்கு முன்னர் (21.06.2005) (இதழ்-12) வெளியீட்டில் ஈசுர விநாயகர் காட்டியருளிய நிறைவேறாத தரிசனங்களை மீண்டும் ஞாபகமூட்டுகின்றேன்.

நாட்டில் இதுவரை நடைபெறாத ஒரு பெரும் அரசியல் சண்டையைக் கண்டேன். பின்னர் கலவரமாக மாறக் கண்டேன். கொழும்பு அரசியல்வாதிகளின் பாதுகாப்பு கேள்விக் குறியாவதைக் கண்டேன். நாட்டைக் காப்பாற்றுங்கள் என்று குரல்கள் ஓலமிடுவதைக் கண்டேன். தமிழக அறிவாளிக் குழுவைக் கண்டேன். குழுவில் ஆணும் பெண்ணும் இருக்கக் கண்டேன். குழுவினர் மத்திய அரசுக்கு இராணுவத்தை அனுப்புமாறு சிபாரிசு பண்ணக் கண்டேன். இந்திய இராணுவ விமானங்கள் தொடர் தொடராக கொழும்பை நோக்கி வருவதைக் கண்டேன். பாதுகாப்பு, உயர் பாதுகாப்பு வலயங்களை இந்திய இராணுவம் கைப்பற்றக் கண்டேன். தெற்கில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பியக்கம் உருவாவதைக் கண்டேன். யாவும் நடைமுறையில் உணருங்கள். போற்றி! போற்றி!! ஈசுர விநாயகர் திருப்பாதம் போற்றி!!!

(1199)

**சோழியூரான் பிறைசூடிக்குரு (ஆன்மிகவாதியும் சந்ததிப் பூசகரும் பரிபாலகரும்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 33

# சமயோசிதமான யுத்தி...



விமானத்தில் பெண் பயணி ஒருவர் ஒரு ஆபிரிக்கரின் அருகில் அமர்ந்திருந்தாள். இனவக்கிர முடைய அந்தப் பெண் விமானப் பணிப்பெண்ணை அழைத்து கறுப்பினத்தவரின் அருகில் தன்னால் தொடர்ந்தும் அமர முடியாது என்றும், தனக்குப் பிரிதொரு இடம் ஒதுக்கித் தருமாறும் கேட்டுக் கொண்டாள்.

ஆனால், விமானம் முற்றிலுமாக நிரம்பிவிட்டது என்றும், முதல் வகுப்பில் இடம் இருந்தால் ஒதுக்கித்தருவதாகவும் சொல்லிவிட்டுச் சென்றாள் பணிப்பெண். இந்நிகழ்வை வெறுப்போடு பார்த்துக் கொண்டிருந்த பயணிகள், குறித்த பெண்ணின் பண்பாடற்ற நடத்தையை மாத்திரமன்றி, போதாக்குறைக்கு முதல் வகுப்பில் பயணம் செய்யப்போவதை இட்டும் கடிந்து கொண்டனர்.

அந்த அப்பாவி ஆபிரிக்கரோ நடக்கும் நிகழ்வால் அதிர்வுற்றிருப்பினும் அமைதியாக இருப்பதற்கு முடிவு செய்து கொண்டார். பெண்ணோ முதல் வகுப்புக்கு செல்லப்போகும் மகிழ்ச்சியில் பணிப்பெண்ணின் வருகையை எதிர்பார்த்திருந்தாள். சில நிமிடங்களுக்குப் பின் திரும்பிய பணிப்பெண் குறித்த பெண்ணிடம் "முதல் வகுப்பில் ஒரு இடம் உள்ளது, இந்த விபரத்தை அறிந்து கொள்வதற்கு சற்று நேரம் செலவாகியது, அதன் பிறகு இடமாற்றத்திற்கு விமானியிடம் அனுமதி பெற வேண்டியிருந்தது, விமானியும் "எமது விமானத்தில் எந்த ஒருவரும் தொந்தரவு தரும் ஒருவரின் அருகில் அமர வேண்டிய கட்டாயமில்லை" என்று கூறி விட்டு இடமாற்றத்திற்கு அனுமதி தந்தார்." என்று கூறி முடித்தாள்.

சக பயணிகளுக்கு அங்கு நடப்பவற்றை உண்மையில் நம்ப முடியவில்லை. குறித்த பெண்ணோ இறுமாப்பில் ஒரு அசட்டுச் சிரிப்போடு முதல் வகுப்பிற்குச் செல்வதற்காக தனது இடத்தை விட்டு எழத் தயாரானாள்.

சரியாக அச்சமயம் பணிப்பெண் கறுப்பின மனிதனைப் பார்த்து, சார், தங்களுக்காக முதல் வகுப்பில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்குச் செல்வதற்காக தயாராகுங்கள். தலைமை விமானி, எமது நிறுவனத்தின் சார்பாக உங்களிடமிருந்து, இவ்வாறான விரும்பத்தகாத நிகழ்வுக்குக் காரணமான ஒருவரின் அருகில் அமர நிர்ப்பந்திக்கப் பட்டமைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றார்." என்று கூறி அந்த மனிதரிடம் தன்னைப் பின்தொடருமாக கேட்டுக் கொண்டாள். குறித்த பெண்ணோ அசடு வழிய பணிப்பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தாள். சக பயணிகள் பிரச்சினையை சமயோசிதமான முறையில் தீர்த்து வைத்த பணிப்பெண்ணைப் பாராட்டினர்.

அந்த வருடம் குறித்த பணிப்பெண்ணுக்கும். தலைமை விமானிக்கும் நிறுவனத்தின் அதியுயர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் கீழ் வரும் வாசகம் நிறுவனத்தின் அனைத்து அலுவலகங்களுக்கும் ஊழியர்களின் பார்வைக்கென என அனுப்பி வைக்கப்பட்டதில் மனிதர்கள் "ஒருவருக்கு என்ன சொன்னது என்பதை மறந்து விடுவார்கள், என்ன செய்தீர்கள் என்பதையும் மறந்து விடுவார்கள், ஆனால் இவற்றை அவர்களுடைய உள்ளங்களில் பதித்து விட்டார்களோ அவற்றை ஒருபோதும் மறக்க மாட்டார்கள்."

**அன்பு வாசகர்களே!**

**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

## ஐ.நா.பொதுச் செய

# ரஷ்யா ெ

## உலக நாடுகள

(கீவ்)

**உக்ரைன் சென்ற ஐ.நா. பொதுச் செ தலைநகர் கீவ்வில் போரினால் பாதிக்க ஆய்வு செய்து கொண்டிருந்தபோது அந் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குத**

ஏப்ரல் நடுப்பகுதி முதல் இந்தப் பகுதியில் இருந்து ரஷ்யப் படைகள் வெளியேறி, அங்கு தாக்குதல்களும் நிறுத்தப்பட்டிருந்தன.

இந் நிலையில் ஐ.நா. பொதுச் செயலாளர் வந்திருந்த வேளையில் மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தாக்குதலில் 25 மாடிகள் கொண்ட குடியிருப்பு ஒன்று சேதமடைந்தது. அதிலிருந்த 2 தளங்கள் முற்றிலுமாக சேதமடைந்தன. இதில் 10 பேர் காயமடைந்தனர் என உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எங்களுக்கு அருகிலேயே ஒரு தாக்குதல் நடந்தது அதிர்ச்சியைத் தந்தது. ஆனாலும் நாங்கள் அனைவரும் பத்திரமாக உள்ளோம் என ஐ.நா. குழு ஆய்வுக் குழுவைச் சேர்ந்த ஒருவர் குறி

## தலைநகரை காப்பாற்ற ஒரு

## வெள்ளத்தில் மூழ்க வைத்த உ

(கீவ்)



கீவ் நகரத்தையும், தாய் நாட்டையும் காப்பாற்றுவதற்கு ஒரு கிராமத்தையே வெள்ளத்தில் மூழ்க வைத்துள்ள உக்ரைன் மக்கள் தங்கள் தாய் நாட்டிற்காக தாங்கள் செய்த சிறிய தியாகம் இதுவென தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல் தொடர்ந்து 65 ஆவது

## ஐ.நா.மனித உரிமைகள

## ரஷ்யாவிற்கு பதிலாக செ

(நியூயோர்க்)

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து ரஷ்யாவை இடைநீக்கம் செய்ய ஐ.நா. பொதுச் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு 93 நாடுகள் ஆதரவு தெரிவித்திருந்தன.

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா அந் நாட்டு அப்பாவி மக்களை கொடூரமாக கொலை செய்ததற்கு பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன.

இந்நிலையில் இம்மாத தொடக்கத்தில் ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து ரஷ்யாவை இடைநீக்கம் செய்யும் தீர்மானத்தை ஐ.நா.பொதுச் சபையில் அமெரிக்கா கொண்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...செயலாளர் வருகை தந்த இடத்திற்கு மிக அருகில்

# ...ரொக்கெட் தாக்குதல்

## ...கள் கண்டனம்

**...ச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் ...திக்கப்பட்ட பகுதிகளை நேற்று முன்தினம் ... அந்தப் பகுதிக்கு அருகில் ரஷ்யா ரொக்கெட் ...க்குதலில் 10 பேர் காயமடைந்தனர்.**

...ப்பிட்டார்.

இந்தத் தாக்குதல் நடந்த இடத்திலிருந்து 3.5 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இடத்திலேயே ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இணைந்து கூட்டாக பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர்.

இந்நிலையில் ஐ.நா. பொதுச் செயலாளர் வந்திருந்த வேளையில் நடந்த தாக்குதலுக்கு உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது காட்டுமிராண்டித்தனம் என உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரியோ குலேபா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 21 ஆம் நூற்றாண்டில் போர் என்பது மூட்டாள்தனம். போர் கொடூரமானது என்று ஐ.நா. பொதுச் செய்லாளர் அன்டோனியோ குட்டேரஸ் தெரிவித்தார்.




போரை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியாக ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்குச் சென்று இரு நாடுகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ரஷ்ய தலைநகர் மொஸ்கோவுக்கு சென்ற அவர், அங்கு ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்து பேச்சு நடத்தினார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை உக்ரைன் சென்ற அவர், அங்கு போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டதுடன், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியையும் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு முடிவடைந்து சில மணி நேரங்களில் தலைநகர் கீவ்வில் ரஷ்யா வான்வழித் தாக்குதல்களையும் நடத்தியதாகவும் உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-6)

## ...ஒரு கிராமத்தை ...உக்ரைன் மக்கள்



...நாளாக நடைபெற்று வருகிறது.

ரஷ்ய இராணுவம் உக்ரைனின் பல்வேறு நகரங்களை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதலில் மரியுபோல் உள்ளிட்ட நகரங்கள் வீழ்ந்தன.

இருப்பினும் உக்ரைனின் தலைநகரான கீவ்வை பிடிப்பதற்கு ரஷ்யா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக கீவ் நகரத்தின் அருகில் உள்ள தெமிடிவ் கிராமம் ஒன்றை ரஷ்ய இராணுவம் பிடிக்க முயற்சி செய்தது. கிராமத்திற்குள் டாங்கிகளுடன் வந்த ரஷ்யப் படைகளை தடுக்கும் முயற்சியில் அந்த கிராமத்தினர்,

அருகில் இருந்த நீர்நிலைகளை தகர்த்து கிராமம் முழுவதையும் வெள்ளத்தில் மூழ்க வைத்தனர்.

இதனால் ரஷ்யப் படைகள் கிராமத்திற்குள் செல்ல முடியாமல் வேறு திசை நோக்கிச் சென்றனர்.

வெள்ளத்தால் அந்தக் கிராமத்தின் கட்டமைப்பே பாதிக்கப்பட்டிருந்தாலும், எண்ணிக்கையில் அடங்காத ரஷ்யப் படைகளிடமிருந்து கீவ் நகரத்தையும், தாய் நாட்டையும் காப்பாற்றுவதற்கு கொடுக்கப்பட்ட சிறிய விலை என்றே உக்ரைன் மக்கள் கூறுகின்றனர். (நி-6)

## ...கள் சபையில் ...செக்குடியரசு?

இந்த தீர்மானத்தின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பில் 93 நாடுகள் ஆதரவாகவும், 24 நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தும் வாக்களித்தன.

இந்தியா உட்பட 58 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன. தீர்மானம் வெற்றி பெற்றதை அடுத்து ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இருந்து ரஷ்யா இடைநீக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நா.பொதுச் சபை செய்தித் தொடர்பாளர் பாலினா குபியாக், ரஷ்யா இடை நீக்கம் செய்யப்பட்டதால் 47 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையில் காலியாக உள்ள இடத்திற்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஒரு நாட்டிற்கு இடம் அளிக்க மே 11 ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெற உள்ளதாக தெரிவித்தார்.

தற்போதுவரை செக்குடியரசு மட்டுமே வேட்பாளர் களத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-6)

## ஆப்கானில் அடுத்தடுத்து குண்டுவெடிப்புகள் 9 பேர் உயிரிழப்பு, 13 பேர் காயம்

(காபூல்)

வடக்கு ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் மாலை சில நிமிட இடைவெளிக்குள் அடுத்தடுத்து இடம்பெற்ற இரண்டு குண்டுவெடிப்புக்களில் குறைந்தது 9 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன், 13 பேர் காயமடைந்தனர்.



பர்ல்க் மாகாணத்தின் தலைநகரான மஸார்-இ-ஷெரீப்பில் இரண்டு தனித்தனி வாகனங்களை குறிவைத்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ரம்ழான் நோன்பை நிறைவு செய்வதற்காக நேற்று முன்தினம் மாலை வீடுகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தவர்களே தாக்குதலில் கொல்லப்பட்டு, காயமடைந்ததாக தலிபான் அரசின் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் முகமது ஆசிப் வசிரி தெரிவித்தார்.

ஷியா முஸ்லிம்களை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது எனவும் கூறிய அவர், ஆப்கானிஸ்தானின் எதிரிகள் எங்கள் மக்களிடையே பதற்றத்தையும் பிளவையும் உருவாக்குகிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தக் குண்டுத் தாக்குதல்களுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் உள்ளூர் கிளைக் குழுவான ஐ.எஸ்.ஐ.எல். பொறுப்பேற்றுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாக்சிச லெனினிச கட்சியின் ஏற்பாட்டில் மே தினப் பேரணி

(நெளுக்குளம்)

உழைக்கும் மக்களே ஒன்று சேருங்கள் நடைமுறையில் உள்ள நாசகார பொருளாதார கட்டமைப்பை வீழ்த்தி, உழைக்கும் மக்கள் அதிகாரத்தை நோக்கிப் புரட்சிகர மே தினத்தில் அணிதிரள்வோம் என்ற கோசத்தினை முதன்மைப்படுத்திப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தின முன்னெடுப்புகள் நாளை மே முதலாம் திகதியன்று வவுனியாவில் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் இருந்து மே தினப் பேரணி ஆரம்பமாக உள்ளதுடன், மேதினப் பொதுக் கூட்டம் பி.ப. 4 மணியளவில் பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டு மைதானத்தில் கட்சியின் வட பிராந்திய செயலாளரும் வலி. கிழக்குப் பிரதேச சபையில் அங்கத்துவம் வகிக்கும் சுயேட்சைக் குழுவின் தலைவருமான கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6-299)



கொவிட்-19 அபாய காலகட்டத்தில் தரம்-5 மாணவர்களுக்கான தென்மராட்சி வலய மட்ட இணைய வழிக் கற்பித்தல் நடவடிக்கைக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை கொடிகாமம் நட்சத்திரமஹால் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் தேவிபுரம் பகுதிகளில் வசிக்கும் 2021 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 14 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு தேவிபுரம் "அ" பகுதி கிராம அபிவிருத்தி சங்க தலைவரும் உடையார்கட்டு விவசாயிகள் கூட்டுறவுச் சங்க தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான த.யோகேஸ்வரன் தலைமையில் தேவிபுரம் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது. (படம்:-தவசீலன்)

# வெள்ள முகாமைத்துவம் தொடர்பில் கலந்துரையாடல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கனகபுரம் தொடக்கம் கணேசபுரம் வரையிலான நகர்ப்பகுதிகளில் மழை காரணமாக ஏற்படுகின்ற வெள்ளப் பாதிப்புகளை முகாமை செய்வதற்கான விடயங்கள் குறித்த கலந்துரையாடல்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் நகர்ப்பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு நிலைமைகள் அவற்றை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

வருடம் தோறும் மழை காரணமாக கிராமங்களில் பொது மக்கள் எதிர்கொள்கின்ற வெள்ளப் பாதிப்பிற்கான தீர்வுகள் மற்றும் பாதிப்புக்கு உள்ளான தனிநபர்களது முறைப்பாடுகளுக்கு அமைய தீர்வினை பெற்றுக்கொடுக்கும் வகையில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (4-6-315)

# வீதியில் டயர் எரித்த இரு இளைஞர்கள் கைது

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம்-நேரியகுளம் வீதியில் டயர் போட்டு எரித்து எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட இரு இளைஞர்கள் செட்டிகுளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கோட்டா - மகிந்த அரசாங்கத்தை பதவி விலகக் கோரி நாடு பூராகவும் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிற் சங்கங்கள் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையிலேயே வவுனியா, செட்டிகுளம் - நேரியகுளம் வீதியில் உள்ள வீரபுரம் பகுதியில் வீதியில் டயர் போட்டு எரித்துள்ளனர்.


இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பொது வீதிக்கு சேதத்தை ஏற்படுத்தியதாக வீரபுரம் மற்றும் காந்திநகர் ஆகிய பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அவர்களது வாக்கு மூலங்களை பதிவு செய்த பின் எச்சரிக்கப்பட்டு அவர்களை விடுவித்தனர். (4-6-250)

# இறந்த நிலையில் கரை ஒதுங்கிய முதலை

(தருமபுரம்)

கிளிநொச்சி கல்மடுக்குளத்தில் நேற்று முன்தினம் இறந்த நிலையில் முதலை ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.



இது வரை காலமும் இக்குளத்தில் இது போன்ற முதலை இறப்பு நடைபெறவில்லை எனவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (4-6-315-316)

# கிரவல் ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற வழக்கின் சான்றுப்பொருளான 1375 கியூப் கிரவல் எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட மாலுருவி, ஒட்டுசுட்டான் எனும் இடத்தில் (கருவேலங்கண்டல் கிராம உத்தியோகத்தர் பிரிவு) ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

எனவே கிரவல் ஏல விற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் அன்றைய தினம் முற்பகல் 11.00 மணிக்கு சமுகமளிக்குமாறு நீதிமன்ற பதிவாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (4-6)



ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முயற்சியில் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் மிசறியோ நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட 20 வீடுகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன. (படங்கள்:-ஜோசப்நயன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 360 | 340 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 280 | 300 |
| தக்காளி | 380 | 450 | 240 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 120 | 80 |
| கோவா | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 180 | 240 | 180 | 200 |
| பூசணி | 80 | 60 | 70 | 80 |
| புடோல் | 200 | 150 | 160 | 160 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 280 | 180 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 180 | 190 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 350 | 220 | 120 |
| லீக்ஸ் | 160 | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 160 | 150 | 160 | 200 |
| கறிமிளகாய் | 250 | 120 | 200 | 280 |
| முருங்கைக்காய் | 700 | 600 | 500 | 1000 |
| போஞ்சி | 400 | 400 | 360 | 480 |
| கத்தரிதம்புள்ள | 380 | 300 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 350 | 350 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 220 |
| பொன்னாங்காணி | 60 | 70 | -- | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப கிருது வருஷ புத்தாண்டுப் பலன்கள்

## வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



(உத்தராடம் 2, 3, 4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 வரை)

பெயரின் முதல் எழுத்துக்கள்: போ, ஜ, ஜி, ஜீ, ஜே, ஜோ, க, கா, கி உள்ளவர்களுக்கும்

**மகர இராசி வாசகர்களே!**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சனி, உங்கள் இராசியிலேயே இருக்கிறார். எனவே எதிலும் ஈடுபாடு செலுத்த இயலாது. தடைகளும், தாமதங்களும் அதிகரிக்கும்.

குடும்பத்தில் பகை, உடன் இருப்பவர்களால் தொல்லை, உத்தியோகத்தில் பிரச்சினை, ஊர் மாற்றம், நிம்மதியின்மை, முன்னேற்றத்தில் பாதிப்புகள் போன்றவற்றை சந்திக்க நேரிடும். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

புத்தாண்டு தொடங்கும் பொழுது ஜென்மத்தில் சனி வீற்றிருக்கிறார். முதல் சுற்றாக இருந்தாலும் சரி, மூன்றாவது சுற்றாக இருந்தாலும் சரி அதிக விரயங்கள் ஏற்படுவதோடு புது முயற்சிகளில் தடைகளையும், தாமதங்களையும் உருவாக்கும். எதிரிகளின் பலம் கூடும். திடீர் திடீரென வரும் தகவல்களால் மனக்குழப்பம் அதிகரிக்கும். 2 ஆம் இடத்தில் செவ்வாய், சுக்கிரன் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். இந்த சஞ்சாரம் சிறப்பான பலனைக் கொடுக்கும். விரயங்களை சுப விரயமாக்க வழிகாட்டும். பழுதான வீட்டைப் பராமரிக்க இயலும். பக்குவ மாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

கல்யாணம் போன்ற சுப நிகழ்வுகள் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கும். உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு, உயர்பதவிகள் வருவதில் தடை ஏற்பட்டாலும், சம்பள உயர்வோடு கூடிய நல்ல வேலை அமைய வாய்ப்புண்டு.

சுக ஸ்தானத்தில் சூரியன், புதன், ராகு சேர்க்கை பெற்றிருக்கின்றன. 'புத ஆதித்ய யோகம்' உருவாவதால், கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். அதே நேரத்தில் சூரியனோடு ராகு இருப்பதால் அரசியல்வாதிகளால் பிரச்சினைகள் ஏற்படலாம். பொதுவாழ்வில் இருப்பவர்கள் வீண் பழிக்கு ஆளாக நேரிடும். திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றங்களைச் செய்வீர்கள்.

மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்பு ஏற்படலாம். சேமிப்புக் கொஞ்சம் குறைந்தாலும் அதை ஈடுகட்டப் புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.

வருடத் தொடக்கத்தில் சனி பகவானும், குரு பகவானும் தங்களுக்குரிய சொந்த வீட்டில் பலம் பெற்று சஞ்சரிக்கிறார்கள். அதே நேரத்தில், சுக்கிர மங்கள யோகம், சந்திர மங்கள யோகம், புத ஆதித்ய யோகம், சகடயோகம் போன்ற யோகங்கள் இருப்பதால் ஜென்மச் சனியாக இருந்தாலும் கூட பெரியளவில் பாதிப்புகளை உருவாக்காது. மேலும் கேது 10 இல் இருப்பதால் தொழில் முயற்சியில் வெற்றி கிடைக்கும். ஆயினும் பங்குதாரர்களிடம் கவனமாக இருப்பது நல்லது.

நான்காம் இடமான சுக ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் உடல்நலக் குறைபாடுகள் ஏற்பட்டாலும், உடனுக்குடன் சரியாவிடும். ஜென்மச் சனி விலகும் வரை, கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டும்.

சனியின் பார்வை குரு மீது பதிவதால் குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். 3 ஆம் இடத்தில் குரு இருப்பதால் முயற்சிகள் சாதகமாக முடியும். உடன்பிறப்புகளில் ஒரு சிலர் உங்களுக்குச் சாதகமாக இல்லாவிட்டாலும் மற்ற சகோதரர்கள் உதவியாக இருப்பர். யாருடனும் பகை பாராட்ட வேண்டாம்.

**குருவின் பார்வை பலன்**

ஆண்டின் தொடக்கத்தில் மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே களத்திர ஸ்தானம் புனிதமடைவதால் சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கும். திருமணத் தடையால் கவலையில் இருந்தவர்களுக்கு, வரன்கள் வாசல் தேடி வந்து நிற்கும். பாக்கிய ஸ்தானத்தையும், இலாப ஸ்தானத்தையும் பார்க்கும் குருவால் பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். பகல் இரவாகப் பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து அழைப்பு




கள் வரலாம். சுய ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்து, பயன் தரும் விதத்தில் 12 ஆம் இடம் இருக்கின்றதா என்பதைக் கண்டறிந்து, அதன்பிறகு முடிவெடுப்பதே நல்லது. பொதுவாக பார்க்கும் குருவைப் பலப்படுத்த, குரு பீடங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் எடுத்த முயற்சிகளில் இருந்த தடை ஓரளவேனும் விலகும்.

**சனியின் வக்கிரமும், பெயர்ச்சிக் காலமும்**

25.5.2022 முதல் 9.10.2022 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிநாதனாகவும், தனாதிபதியாகவும் விளங்கும் சனி வக்கிரம் பெறும்பொழுது பண நெருக்கடி அதிகரிக்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருப்பது நல்லது. 29.3.2023 இல் கும்ப இராசிக்குச் சனி செல்கின்றார். அதன்பிறகு ஓரளவு உங்களுக்கு நற்பலன்கள் நடைபெறும். குறிப்பாக வழக்குகளில் வெற்றி கிட்டும். வருமானம் திருப்தி தரும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மீண்டும் பழைய வேலையிலேயே சேருவது பற்றிச் சிந்திப்பார்கள்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

இந்தப் புத்தாண்டில் தடைகளும், தாமதங்களும் அகல சனிக்கிழமை தோறும் காக வாகனத்தான் சனி பகவானை கைகூப்பித் தொழுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டில் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. வாய்ப்புகள் வந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. கணவன் - மனைவிக்குள் அன்னியோன்யம் குறையும். வாழ்க்கைத் துணையை அடுத்தவர்களோடு ஒப்பிட்டுப் பேச வேண்டாம்.

குடும்பத்தில் மூத்தவர்களின் சொல் கேட்டு நடப்பதன் மூலமே அமைதிக்கான வழி பிறக்கும். ஜென்மச் சனி முடியும் வரை பொறுமையாக இருப்பது நல்லது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்


## அம்புலிமாமா

# விசித்திர மருந்து

(நேற்றைய தொடர்ச்சி)

ஆறு மாத காலம் இவ்வாறு போய் யோகி கொடுத்த மருந்தைச் சாப்பிட்டதில் தன் நோய் முற்றிலும் போய் விட்டதாக அவன் உணர்ந்தான். அவன் தன் ஊருக்கு வந்த போது பரமானந்தர் வட நாட்டில் யாத்திரை செய்து வரப் போயிருந்தார். ஒரு மாத காலம் கழிந்தது. அப்போது தனசேகரன் மீண்டும் தனக்குப் போன நோய் வந்து விட்டதாக உணர்ந்தான்.

யோகி கொடுத்த மருந்துப் பொட்டலங்களும் தீர்ந்து போயின. அதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகே பரமானந்தர் ஆச்சிரமத்திற்கு வந்தார். அவர் வந்த அன்றே தனசேகரன் தன் மனைவியோடு அவரது ஆச்சிரமத்திற்



குச் சென்று அவரைக் கண்டான். அவரும் "உன் யாத்திரை நன்கு நடந்ததா? உன் நோயும் போயிற்றா?" என்று கேட்டார். தனசேகரனும் "யாத்திரையின் போது நோய் இருப்பதாக நான் உணரவில்லை. ஆனால் நான் இங்கு திரும்பி வந்த பிறகு போன நோய் திரும்ப எனக்கு வந்து விட்டது. முன்பு கொடுத்த மருந்தை இன்னமும் ஒரு வருட காலம் சாப்பிடுவதற்கு கொடுத்தால் நோய் போய் விடும்" என்றான்.

அது கேட்டுப் பரமானந்தர் சிரித்தவாறே "அந்த மருந்தை உன் வீட்டிலேயே தயாரிக்கலாம். அதற்கான முறையை நான் உன் மனையிடம் தெரிவிக்கிறேன். நீ போய் அந்தக் கோவிலில் உட்கார்ந்திரு" என்றார்.


தனசேகரன் அங்கிருந்து போனதும் பரமானந்தர் அவன் மனைவியிடம் "உன் கணவருக்கு உண்மையில் எவ்வித நோயும் இல்லை. ஊரிலே தான் பணக்காரன் என்று எண்ணி அவன் மற்றவர்களைத் தன் விரோதிகளாக நினைக்கிறான். இதனால் பயம் கொள்கிறான். எங்கே லட்சுமணன் தன்னை விடப் பணக்காரனாகி விடுவானோ என்று பொறாமைப்படுகிறான். உறவினர்களிடமும் இது போல பயம் கொண்டிருக்கிறான். இந்தப் பயமே அவனது மன அமைதியைக் கெடுத்து அவனுக்கு நோயாகத் தெரிகிறது. இந்தப் பயம் அவனது மனத்திலிருந்து அகன்றாலே அவன் குணமடைவான்" என்றார்.

அப்போது தனசேகரனின் மனைவி "இதை நீங்களே அவரிடம் சொல்லியிருக்கலாமே" எனவே பரமானந்தரும் சிரித்தவாறே "ஒரு சிலருக்கு அவர்களது குற்றம் குறைகளை எடுத்துச் சொன்னால் அவர்கள் லேசில் அவற்றை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்



மாலைப் பொழுது மறைந்து இருள் பொழுது வந்து சேர்ந்தது. அங்கு ஒரு பளிக்கறை மண்டபத்தில் இருவரும் தங்கினர். "வீரனே! குடிப்பதற்கு நீர் வேண்டும் கொண்டு வருக" என்றான். இராமனை விட்டு இலக்குவன் தனியே சென்றான்.

**மற்றுமொரு சூர்ப்பனகை**

எங்கு தேடினும் நீர் கிடைக்கவில்லை. சிங்கம்போல் காட்டில் அவன் திரிந்து கொண்டிருந்தான். அங்கு அவ்வனத்தில் இரும்பு போன்ற முகத்தை உடைய அயோமுகி என்னும் அரக்கி இவனைக் கண்டாள்; கண்டதும் இவன் மீது விருப்பம் கொண்டாள். இவன் "மன்மதனாக இருக்கிறான்" என்று நினைத்தாள்; தன் செருக்கையும் கொடுமையையும் தணித்துக் கொண்டாள்.

"இவனை அணைத்துக் கொள்வேன்; மறுத்தால் அடித்துக் கொல்வேன்" என்று முடிவுக்கு வந்தாள். அவன் தன்னை ஏற்க மறுத்தால் அவனைத் தூக்கிச் செல்வது என்ற முடிவுக்கு வந்தாள். இலக்குவனைச் சந்தித்தாள், நெருங்கி அணைந்தாள். "இருட்டில் முரட்டுத்தனமாக மருட்டும் நீ யார்?" என்று கேட்டான். "நான் உன்னைத் தழுவ விருப்பம் கொண்டேன்; உன்னை அடையாவிட்டால் நான் உயிர் விடுவது உறுதி" என்றாள்.

இவளும் ஒரு சூர்ப்பனகை என்பதை அறிந்தான். "நின்றால் உன் மூக்கும் செவியும் அறுபடும்" என்று அதட்டிப் பேசினாள். அவன் அஞ்சவில்லை; கோபமும் கொள்ளவில்லை. இலக்குவனை வாரி எடுத்துக் கொண்டு வான் வழியே சென்றாள். தன் குகையில் அவனை வைத்து அவன் சினம் தணிந்ததும் அவனைத் தழுவி இன்பம் அடையலாள் என்று நினைத்தாள். இலக்குவன் சீற்றம் மிகக் கொண்டான். அவளிடமிருந்து விடுபடுவது எப்படி என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

இலக்குவனைப் பிரிந்த இராமனின் துயர் இரு மடங்காயிற்று. சீதையைப் பிரிந்த துயர் ஒருபுறம், இக்குவனை இப்பொழுது பிரிந்த துயர் மற்றொரு புறம். நீரைக் கொண்டு வரச் சென்றவனை யாரோ ஆபத்தில் சிக்க வைத்து இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். "சீதையைக் கவர்ந்து சென்ற இராவணன் இவனையும் கடத்திச் சென்று விட்டானோ, அன்றிக் கொன்று தீர்ந்தானோ, சீதையைக் காவல் செய்வதில் நெகிழ்ச்சி பெற்றமைக்கு வருந்தித் தானே உயிர் துறந்தானோ" என்று பலவாறு நினைத்தான்.

கண்ணை இழந்தவன்போல் கதறி அழுதான் "உயிர் போன்று இருந்தாய். என்னைத் தவிக்கவிட்டுச் சென்றது பொருத்தமா?" என்று பிரலாபித்தான்.

"அரசு துறந்த போதும் தனி ஒருவனாக நீ என்னைப் பின் தொடர்ந்தாய்; என் துக்கத்தில் பங்கு கொண்டு என்னோடு வந்தாய். அத்தகைய நீ என்னை விட்டுப்பிரிந்து போதல் தகுமா?" என்று கூறி வருந்தினான்.

"அறத்தின் செயல் இதுவாக இருக்குமானால் அடுத்த பிறவியில் உனக்கு நான் தம்பியாகப் பிறப்பது என் கடமை ஆயிற்று" என்று கூறித் தன் உயிரைப் போக்கிக் கொள்ள முடிவு செய்தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> சமயம் மாறுபவன் தலை போனபின் இன்னதெனத் திரும்பிப் பார்க்கும் ஈயை ஒப்பான்.
>
> – பட்லர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அதிரடியாக சுருதியை மாற்றும் சிங்கள அரசியல் கட்சிகள்

ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தென்பகுதியில் இடம்பெறும் போராட்டம் தொடர்ச்சியாக நீண்டு செல்கிறது.

ஜனாதிபதியையும் அவர் தலைமையிலான அரசாங்கத்தையும் வெளியேற்றியே ஆக வேண்டும் என்பது தென்பகுதியின் நிலைப்பாடாக இருக்க, புதிய அமைச்சரவை, இடைக்கால அரசாங்கம் என மாறி மாறி வியூகங்களை வகுத்து ஆட்சியைத் தக்கவைக்கும் முயற்சிகளும் தாராளமாக நடந்தாகின்றன.

எதுவாயினும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் இருந்து விலக்க வேண்டும் என்ற கோசம் தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடம் வலுப்பெற்றிருப்பதைக் காண முடிகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டுமென்ற கோசத்தோடு ஆரம்பமான மக்கள் எழுச்சிப் போராட்டம் ஓர் ஒழுங்கு முறையில் நடந்து கொண்டிருக்கையில், அதற்கு ஆதரவு தெரிவித்து வந்த சிங்கள அரசியல் கட்சிகள் திடீரென தமது சுருதியை மாற்றியுள்ளன.

அதாவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருப்பதொன்றும் தமக்குப் பிரச்சினையில்லை.

மாறாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பதாக தென்பகுதி அரசியல் கட்சிகளின் கோசம் மாற்றம் பெற்றுள்ளது.

இவ்வாறான மாற்றம் எதற்கானது என்று ஆராயும்போது இரண்டு விடயங்கள் முன்னெழுகின்றன.

அதாவது, அண்மையில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கைகள் சுத்தமானவை எனக் கூறியிருந்தார்.

அவ்வாறு அவர் கூறியதன் மூலம் நாட்டில் நடந்த ஊழல்களுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே காரணம் என்பதாகப் பொருள் கொள்ளப்பட்டதன் அடிப்படையில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்கியே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு தென்பகுதி அரசியல் கட்சிகள் வந்திருக்கலாம்.

இதை நாம் கூறும்போது அவ்வாறான நிலைப்பாடுகள் இல்லை என்றால், பிரதமர் மகிந்த பதவி விலக வேண்டும் என்பதற்கான வலுவான காரணம்; பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்கிவிட்டால், அதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து நீக்குவது சுலபமாகிவிடும் என்பதாக இருக்க வேண்டும்.

எது எவ்வாறாயினும் தென்பகுதி அரசியல் கட்சிகளின் சுருதிமாற்றம் தொடர்பில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும்.

# நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்தாலும்
# வடக்கு, கிழக்கை அடக்குவதிலேயே அரசாங்கம் குறியாக இருக்கின்றது
## சுமந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்திருக்கின்ற போதும்கூட எங்களது வடக்கு, கிழக்கு தமிழ் பிரதேசங்களிலே எந்த வித சத்தங்களும் கேட்கக் கூடாது என்ற வகையிலே அரசாங்கம் செயற்படுகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பூராகவும் பாரிய போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நேற்று முன்தினம் கடையடைப்பு, தொழிற்சங்கங்கள் எல்லாம் வீதியில் இறங்கிப் போராடினார்கள். தற்போது மக்கள் திரண்டு அரசாங்கத்திற்கு எதிராக ஜனாதிபதியும், பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையும் பதவி விலக வேண்டும் என போர்க் கொடியை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் தென்பகுதியிலே நிகழ்கின்றபோது வடக்கிலேயும் கிழக்கிலேயும்தான் இவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகள் பலவந்தமாக மேற்கொள்ளப்படுகின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்களுக்கு அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யக் கூடாது, வீதிகளை முடக்கக் கூடாது என்று களுவாஞ்சிக்குடி பொலிஸாரினால் நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரினால் நீதிமன்ற உத்தரவு கையளிக்கப்பட்ட அதேவேளை நாடு முழுவதும் முடக்கப்பட்டிருந்தது.

பிரதான எதிர்க்கட்சி கண்டியில் இருந்து பாரிய ஆர்ப்பாட்டத்தினை முழு வீதியையும் மறித்தே செய்கின்றார்கள். அங்கே ஒரு சட்டம் இங்கே வேறு சட்டங்கள்.

நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்திருக்கின்ற போதும்கூட எங்களது வடக்கு, கிழக்கு தமிழ் பிரதேசங்களிலே எந்த வித சத்தங்களும் கேட்கக் கூடாது என்ற வகையிலே அரசாங்கம் செயற்படுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும். ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை பதவி விலக வேண்டும்.

நாட்டை இப்படியாக மிக மோசமான நிலைக்குள் தள்ளியிருப்பவர்கள் தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கத் தகுதியற்றவர்கள் என்பதில் நாங்களும் உறுதியாக இருக்கின்றோம். பாராளுமன்றத்திலும் வெளியிலும் இதற்கான எமது போராட்டமும் தொடரும் என்று தெரிவித்தார்.

(ம-7)

## 37 ஆயிரம் அமெரிக்க டொலர் நன்கொடையாக கிடைத்துள்ளது

வெளிநாட்டில் இருந்து வழங்கப்படும் நன்கொடைக்கான கணக்கிற்கு 37 ஆயிரம் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு இலங்கையில் அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு நிதி திரட்டுவதற்காக இந்த கணக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கணக்கு நன்கொடைகளுக்காக மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கணக்கில் வரவு வைக்கப்படும் ஒவ்வொரு டொலருக்கும் இலங்கை மத்திய வங்கி பொறுப்பு என்றும் அந்தக் கணக்கின் செலவினங்களை மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## கோவிட் தொற்று; 28 பேர் அடையாளம்

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 28 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 663,329 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 704 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7)

## மூன்று பொலிஸாருக்கும் 13 ஆம் திகதி வரை மறியல்

(கொழும்பு)

ரம்புக்கனையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

அம் மூவரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



### மனிதனின் உண்மை அடையாளம்

❖ பற்றற்ற மனப்பான்மையை நீங்கள் பெற்று விட்டால் உஙங்களுப்பு நன்மையோ தீமையோ எதுவும் இல்லை நன்மை தீமை என்ற வேறுபாட்டை உருவாக்குவதே சுயநலம் தான்.

❖ இது புரிந்து கொள்ள சற்றுக்கடினமானது. ஆனால் நீங்கள் அனுமதிக்காமல் பிரபஞ்சத்தில் உள்ள எதற்கும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான ஆற்றல் இல்லை என்பதை காலப் போக்கில் நீங்கள் புரிந்து கொள்ளவே போகிறீர்கள்.

❖ ஆன்மா ஒரு முட்டாளாகி தன் சுதந்திரத்தை இழக்காத வரை எந்த ஆற்றலும் மனித ஆன்மாவை எதுவும் செய்ய முடியாது. பற்றின்மை என்பதன் மூலம் உலகின் மற்ற எதுவும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்கவும் தவிர்க்கவும் செய்கிறீர்கள

❖ நீங்கள் அனுமதிக்காத வரையில் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமை எதற்கும் கிடையாது என்று சொல்லிக்கொண்டிருப்பது எளிது.ஆனால் தன் மீது எதையும் ஆதிக்கம் செலுத்திவிடாத மனிதனின் உண்மை அடையாளம் என்ன?புறவுலகம் அவன் மீது செயல்படுவதன் காரணமாக சுகஆமா துக:கஆமா அடையாத அவனது அடையாளம் என்ன? நல்லதோ கெட்டதோ அவன் மனதில் எந்த மாறுபாட்டையும் ஏற்படுத்தாது.எந்தச் சூழ்நிலையிலும் அவன் சமமாக இருப்பான்.இதுதான் அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 54

அட்டவணை (P1): இன மற்றும் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு

குருணாகல் மாவட்டம்

| இனப்பிரிவு | எண்ணிக்கை | % | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 1,479,863 | 91.4 | பௌத்தம் | 1,431,632 | 88.5 |
| இலங்கைத்தமிழர் | 18,041 | 1.1 | இந்து | 14,721 | 0.9 |
| இந்தியத் தமிழர் | 2,594 | 0.2 | இஸ்லாம் | 118,305 | 7.3 |
| இலங்கை முஸ்லிம் | 115,302 | 7.1 | ரோமன் கத்தோலிக்கம் | 43,711 | 2.7 |
| வேறு | 2,665 | 0.2 | ஏனைய கிருஸ்தவம் | 9,926 | 0.6 |
| | | | வேறு | 170 | - |
| மொத்தம் | 1,618,465 | | மொத்தம் | 1,618,465 | |

சனத்தொகையில் பெரும்பான்மையான சிங்களவர் சனத்தொகை 91 வீதமாகவும் பௌத்தர்கள் 88 சதவீதம் உள்ளடக்கியுள்ளமை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகவல் மூலம் தெரிய வருகின்றது. இலங்கை முஸ்லிம்கள் போன்றே இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றுவோர் 7 சதவீதத்திற்குக் கிட்டிய தொகையினராக உள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012

| பிரதேச செயலகம் | தமிழர் | முஸ்லிம் |
|---|---|---|
| கிரிபாவ | 27 | 2493 |
| கல்கமுவ | 560 | 3444 |
| எஹெட்டுவெவ | 21 | 720 |
| அம்பன்பொல | 35 | 355 |
| கொட்டவெஹெர | 24 | 105 |
| ரஸ்நாயக்கபுர | 45 | 4112 |
| நிக்கவெரட்டிய | 327 | 1422 |
| மஹவ | 304 | 2916 |
| பொல்பித்திகம | 57 | 17 |
| இப்பாகமுவ | 939 | 6319 |
| கனேவத்த | 195 | 1855 |
| வாரியபொல | 285 | 852 |
| கொபெய்கனே | 51 | 3847 |
| பிங்கிரிய | 375 | 1903 |
| பண்டுவஸ்நுவர | 352 | 8358 |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 74 | 651 |
| பமுணகொட்டுவ | 73 | 741 |
| மாஸ்பொத்த | 553 | 778 |
| குருநாகலை | 3320 | 8693 |
| மல்லவபிட்டிய | 1207 | 7656 |
| மாவத்தகம | 3330 | 7538 |
| ரிதிகம | 2750 | 9908 |
| வீரம்புகெதர | 115 | 49 |
| குளியாப்பிட்டிய கிழக்கு | 234 | 16,983 |
| குளியாப்பிட்டிய மேற்கு | 939 | 1980 |
| உடுபத்தாவ | 608 | 5376 |
| பன்னல | 1367 | 7118 |
| நாரம்மல | 448 | 3349 |
| அளவ்வ | 208 | 7 |
| பொல்கஹவெல | 1812 | 5757 |
| மொத்தம் | 20,635 | 115,302 |

## குருநாகல் மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால் வடமேல் மாகாண சபையில் உள்ள குருநாகல் மாவட்டத்திற்கு 34 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி குருநாகல் மாவட்டம் 17 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக் கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால் வடமேல் மாகாண சபையில் உள்ள குருநாகல் மாவட்டத்திற்கு 34 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச் சட்டம் பகுதி 3 A (2) இன் படி குருநாகல் மாவட்டம் 17 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக் கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப் பட வேண்டி இருந்தது.**

குருநாகல் மாவட்டத்தில் 30 பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட 1,610 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 1,618, 465 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 95,204 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

**குருநாகல் மாவட்டத்தில் 30 பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட 1,610 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத் தொகை 1,618,465 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத் தொகை 95,204 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

குருநாகல் மாவட்ட செயலகத்தில் 20.11.2017 காலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 12 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 05 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 17 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

ஒரு சில பிரேரணைகள் தேர்தல் தொகுதி எல்லை பிரிப்பின்போது உள்ளூர் அதிகார சபைகளின் எல்லைகளை அடிப்படையாக எடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தன. அதில் ஒரு பிரேரணை மாகாண சபைக்கான 17 தேர்தல் தொகுதிகளையும் எவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தது.

இன்னும் ஒரு பிரேரணை 6 தேர்தல் தொகுதிகளை எவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்புதை குறிப்பிட்டிருந்தது. ஒரு பிரேரணை தேர்தல் தொகுதி பிரிமுறைபற்றி குறிப்பிடவில்லை. சில பரிந்துரைகள் எல்லை நிர்ணயம் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளை (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என கூறியிருந்தன.

சில பிரேரணைகள் பரிந்துரைத்தது பொல்கஹவெலைக்கு பல் அங்கத்தவர் கொண்ட தேர்தல் தொகுதி ஒன்றை உருவாக்குவதையே ஆகும். எல்லை நிர்ணயம் செய்வதற்கு தேவையான மக்கள் தொகை, புவியியல் பிராந்திய தகவல்கள் மற்றும் இயல்பு தகவல்கள் போன்றவை உள்ளுராட்சி அதிகார சபைகள், பழைய பாரளுமன்ற தொகுதிகள் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகள்) அடிப்படையில் அமையாமல் இருந்ததோடு, அவை கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலகப்பிரிவு ஆகிய நிர்வாகப் பிரிவுகள் அடிப்படையில் அமைந்து இருந்ததால் கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலகப் பிரிவு ஆகியவற்றை அடிப்டையாக்கொண்டும் 2017 ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தின் 3(A) (4) (b) பிரிவின் நோக்கத்திற்கு அமைவாகவும் எல்லை நிர்ணயம் செய்ய குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

பிரேரணைகளில் சிலவற்றில் பரிந்துரைக்கப்பட்டிருந்ததாவது, எல்லை நிர்ணயமானது, பிரதேச செயலக பிரிவு எல்லைகளையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் அடிப்படையாக்கொண்டு அமைய வேண்டும் என்றும் இதற்கு இனம் மற்றும் பிரதேசத்தின் பரப்பளவு என்பவற்றை கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ளன. இப்பரிந்துரைகள் முதன்மைச்சட்டத்திலும் 2017 திருத்தச்சட்டத்திலும் குறிப்பிட்ட நோக்கத்திற்கு ஒத்துப்போவதாக உள்ளதை குழு அவதானித்தது.

ஒரு பிரேரணை 2 பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கி 15 தேர்தல் தொகுதிகளை பரிந்துரைத்தது. வேறு சில பிரேரணைகள் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் சமமான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை கொண்டு தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டுமென பரிந்துரைத்தன. பிந்திய பிரேரணையை குழுவால் கருத்தில் கொள்ளமுடியவில்லை. ஏனென்றல் பரிந்துரைக்கப்பட்ட தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாதலுமே ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச பொது...

நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பிலான சுற்றுநிருபம் வெளியிடப்படவுள்ளதாகவும் உள்நாட்டலுவல்கள் மற்றும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார். (ம-7)

## புதுக்குடியிருப்...

பிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரங்கள் புதுக்குடியிருப்பு பகுதியில் வீசப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பில் நடந்து கொண்டிருக்கும் சில தவறுகள் தண்டிக்கப்பட வேண்டியவை.

சில தவறுகள் எமது குழுவினரால் கண்டறியப்பட்டுள்ளன எனத் தொடரும் குறித்த துண்டுப்பிரசுரத்தில் சில சமூக சீரழிவு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (ம-7)

## எரிபொருள்...

நாளொன்றுக்கு அதிகபட்ச எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விநியோகித்து தற்போதுள்ள பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அதன் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன் 3,500 மெட்ரிக் தொன் எரிவாயுவுடன் மற்றுமொரு கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்தது.

பெரும்பாலான எரிவாயு நுகர்வோர் நகர்ப்புறங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால், நகர்ப்புற விநியோகத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் லிட்ரோ தெரிவித்துள்ளது. (ம-7)

## மின்வெட்டு...

என அறிவிக்கப்பட்டுள்ளது.

மே தினம் மற்றும் ரம்ழான் விடுமுறைகளை முன்னிட்டே மின்வெட்டு தவிர்க்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## புதிய பிரதமரின்...

ஜனாதிபதியுடன் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "இடைக்கால அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க அவர் இணங்கியுள்ளார்.

அதேபோன்று தற்போதுள்ள பிரதமரை நீக்கி புதிய பிரதமர் ஒருவரை நியமிக்கவும் அவர் தலைமையிலான புதிய அமைச்சரவையொன்றை ஸ்தாபிக்கவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக எதிர்வரும் நாட்களில், அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி கடிதம் ஊடாக அழைப்பு விடுப்பார் என நாம் எதிர்பார்க்கிறோம்.

புதிய பிரதமர் தலைமையில் அமையவுள்ள புதிய அமைச்சரவையில், அமைச்சர்களின் எண்ணிக்கை-15 இலிருந்து 20 இற்குள் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளோம்.

அத்தோடு எமது கோரிக்கைக்கு இணங்க, தேசிய சபையொன்றை ஸ்தாபிக்கவும் ஜனாதிபதி இணங்கியுள்ளார்" எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## பதவிகளுக்கு...

காடுக்கப் போவதில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மூன்றாவது தின பாத யாத்திரை நேற்று தங்ஹோவிட்டவில் ஆரம்பமாகியது. இவ் யாத்திரையின் ஆரம்பத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரசாங்கம் தற்போது அச்சாறாக மாறியுள்ளது. அச்சாறாக மாறியுள்ள அரசாங்கத்தில் இடைக்கால அரசாங்கத்தை அமைக்கவோ, அதன்பங்காளியாக மாறவோ ஐக்கிய மக்கள் சக்தி தயாரில்லை.

இடைக்கால அரசாங்கம் என்ற நாடகம் பற்றி நான் ஆரம்பத்திலேயே அறிந்து இருந்தேன். எதிர்க்கட்சித் தலைவர் பதவியோ, அதற்கும் மேல் பெரிய பதவியோ எனக்கு ஆபரணம் அல்ல.

பதவிக்கு அடிமையாகி மக்களின் போராட்டத்தை காட்டிக்கொடுக்கப் போவதில்லை. மக்களின் எதிர்ப்பு மற்றும் கோரிக்கைகளை சலுகைகளுக்காக காட்டிக்கொடுக்கும் பழக்கம் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடையாது.

நாட்டு மக்களுக்கு வெற்றியை பெற்றுக் கொடுப்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் பேராட்டம்.

பணம், சலுகைகளை வழங்கி அரசாங்கத்தை அமைக்க சிலர் நடவடிக்கை எடுத்தாலும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அந்த சலுகைகளுக்கு ஏமாந்துவிடமாட்டார்கள் என்றார். (ம-7)

## பிரதமர் பதவி...

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின்போதே நாமல் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார் என குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கினால் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்காகவே கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 இலட்சம் மக்கள் வாக்களித்தனர் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ம-7)

## சர்வகட்சி...

பதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர், ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய, தற்போது சுயாதீனமாக செயற்படும் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் நேற்று முற்பகல் கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக, தேசிய ஒருமித்த அரசாங்கமொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், அதன் முதற்கட்டமாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் பங்களிப்புடன் தேசிய சபையொன்றை நியமிப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டது.

கட்சிப் பிரதிநிதிகள் முன்வைக்கும் பொதுத் தீர்மானத்திற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவளித்தால் தாம் அதற்கு இணங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக கலந்துரையாடலில் கலந்துகொண்ட பிரதிநிதிகளில் ஐந்து பேரை பெயரிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

பொதுஜன பெரமுன உட்பட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களை பெற்றதன் பின்னர், முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குவது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, சுசில்பிரேமஜயந்த, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, மகிந்த அமரவீர, அனுர பிரியதர்ஷன யாப்பா, விஜேதாச ராஜபக்ஷ, திஸ்ஸ விதாரண, டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன, தயாசிறி ஜயசேகர உட்பட பலர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ம-7)

## இந்திய நிதி...

இந்திய நிதியுதவியின் கீழ் ஒரு தொகை மருந்துப் பொருட்கள் நேற்று நாட்டை வந்தடைந்தன.

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு சுகாதார அமைச்சினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இவை கிடைக்கப் பெற்றுள்ளன. (ம-7)

## வரியை உயர்த்...

கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில் வரியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமகால அரசாங்கம் வற் வரியை எட்டு வீதமாக குறைத்தமையினால் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் அரசாங்கம் பெரும் தவறை செய்துள்ளதாக அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

நாளாந்த அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அடுத்த எட்டு மாதங்களில் 4 பில்லியன் டொலர்கள் தேவை.

வரியை உயர்த்த வேண்டும். எங்களிடம் உள்ள வருவாய் மற்றும் செலவின இடைவெளியைக் குறைக்க ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றார். (ம-7)

தன நிதானய
திகதி -2022.04.29
சீட்டிழுப்பு இலக்கம் - 777
W 09 20 44 51

மஹஜன சம்பத
திகதி 2022/04/29
சீட்டிழுப்பு இலக்கம் 4747
M 4 6 1 0 6 4

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.04.29
சீட்டிழுப்பு இலக்கம் 056
சிம்மம் 09 37 48 55 சிம்மம்

மெகா பவர்
திகதி 29/04/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1095
H 24 04 15 17 51

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1724 நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022/04/29 தினம் வெள்ளி
X 02 07 32 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 59,082,648/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,545,833/-
திகதி 2022/04/29
வெற்றி வாரம் 3436
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 10 42 54 55 மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,052,300/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.04.29
சீட்டிழுப்பு இல: 3885
வர்ணம்: செம்மஞ்சள்
ரூ. 4,947,260/-
வெற்றி இலக்கங்கள் 02 39 42 69 J

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 164
சீட்டிழுப்பு திகதி 29.04.2022
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 28 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,357,000/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 21 16 45 62 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 233,901,121/-
900
2022.04.29 வெள்ளிக்கிழமை

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1550
சீட்டிழுப்பு திகதி: 2022.04.29
ரூ. 3,627,740/-
13 37 67 75 Q

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சிலிண்டர்கள், தீப்பெட்டிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பெருமளவில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த தீப்பெட்டிகள் மற்றும் எரிவாயு சிலிண்டர்கள் என்பன பாவனையாளர் அதிகார சபையின் நடவடிக்கையில் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாவனையாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பான முறைப்பாட்டின் அடிப்படையில் பாவனையாளர் அதிகார சபையினரால் நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது வர்த்தக நிலையத்தில் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்ய பதுக்கி வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர்கள் பொலிஸ் உதவியுடன் கைப்பற்றப்பட்டு சரியான விலைக்கு பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அவ் வர்த்தகருக்கு எதிராக வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

மேலும் இவ்வாறாக எரிவாயு சிலிண்டரினை அதிகூடிய விலைக்கு விற்பனை செய்தல் மற்றும் பதுக்கி வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை வர்த்தகர்களுக்கு பாவனையாளர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7,33,104)

## நீராடச் சென்ற சகோதரர்கள் நீரில் மூழ்கி பலி

வாரியபொல குருணவ பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

சகோதரர்கள் இருவரும் நேற்று முன்தினம் வாவியில் நீராடச்சென்ற வேளை இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் மூத்த சகோதரர் 43 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் இவர் கடற்படையில் பணியாற்றியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், அவரது இளைய சகோதரர் கித்சிறி அசேல 34 வயதுடையவர் எனவும் தெரியவந்துள்ளது.

இதன்போது உயிரிழந்தவர்களின் சடலங்கள் வாரியபொல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)


## தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு,

பராமரிப்பாளர் (பெண்)
உளவளத்துணையாளர் (பெண்)
முகாமையாளர்

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

உடன் தொடர்பு கொள்ளவும்!!!!!

பாரதி சிறுவர் அபிவிருத்தி நிலையம் (11197)

**071 535 4500, 071 535 4501**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளான் ஒட்டகப்புலத்தில் 39 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- அச்சுவேலி - தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பிரதான (காபற்) வீதியில் இருந்து 50m தூரத்தில்.
- ஒட்டகப்புலம் றோ.க.த.கலவன் பாடசாலைக்கு அருகாமையில்.
- 14 அடிப்பாதையுடன்.
- அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து 2km தூரம்.

ஒரு பரப்பின் விலை: ஐந்து இலட்சம் (11214)

**077 911 6983**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளானில் 42 பரப்பு காணி 2 பரப்பாகவும் 2 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- வசாவிளான் மகா வித்தியாலயத்தில் இருந்து (பலாலி வீதி)1 Km தூரம்.
- வசாவிளான் தபால் கந்தோர் அருகாமை (300m தூரம்)
- 14 அடி பாதையுடன்
- அச்சுவேலி - தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து 800m தூரம்.

1 பரப்பின் விலை : 3 இலட்சம் (11213)

**074 043 6599, 074 043 6375**

## வேலை வாய்ப்பு

வட மாகாணத்தில் இயங்கி வரும் எமது நிறுவனத்தின் கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- Supervisor
- Administration
- Assistant Manager
- Store Keeper
- Manager

போன்ற பதவிகள் எம்மிடம் உள்ளன.

Salary Per day 1,500/= to 2,800/= (9586)

**Call : 077 695 3242**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதி ஆனந்தபுரம் பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- நல்ல தண்ணீர்ஊற்று சூழல்
- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 2km தூரம்
- நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து 3km தூரம்

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை


1 பரப்பின் விலை 750,000/=

தரகர் தேவையில்லை (11211)

ஜெயம்

**077 814 7389, 077 241 7589**


## மரண அறிவித்தல்



தோற்றம் 11 - 10 - 1953

மறைவு 27 - 04 - 2022

### சுப்பிரமணியம் சந்திரதாஸ்

யாழ். நகர் கலைப்புலவர் வீதியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சந்திரதாஸ் அவர்கள் கடந்த 27.04.2022 (புதன்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற M.C. சுப்பிரமணியம் - இலக்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற கந்தசாமி - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் பிறேமராணி (சாச்சா) அவர்களின் அன்புக் கணவரும் சந்திரபோஸ், நிர்மலாதேவி, இரவீந்திரதாஸ், கலாதேவி, ஜெயந்தி, இராகுலன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற இந்திரராணி, தவராணி, சந்திரராணி, கமலராணி (ஆசிரியை), தபோஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் நாளை (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (11220)

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

077 893 3570
076 600 2410

தகவல் :- குடும்பத்தினர்


## IMMEDIATE VACANCY

**Administrative Assistant**



Duties
- Assisting Visa Applications
- Air Ticketing
- Office Administration

Requirements
- Fluent in English
- Relevant Experience

Salary-40'000/=

CIMS COLLEGE 0777068777
49A, Chappel lane, Jaffna ( near Jaffna Central college) (C-4249)

## LIVE IN CANADA

கனடாவில் முதியோர் பராமரிப்பு ஹோட்டல் முகாமைத்துவம் போன்ற துறைகளில் இலகுவாக வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள

கனடாவில் வேலைவாய்ப்புகள், குடும்பத்துடன் நிரந்தர வதிவிடம், உயர்கல்வி ஆலோசனைகள்.

இலவச கருத்தரங்கு

01-05-2022 ஞாயிறு காலை - 11மணி

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். (C-4249)

முற்பதிவு அவசியம் 0777-068-777

## ஆங்கில வகுப்பு

ஆண்டு 2 தொடக்கம் G.C.E (O/L), G.C.E (A/L) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வீட்டிற்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு

**076 119 9298**
**M.Rajan** (10210)

## கணிதம், வரலாறு 09, O/L, A/L

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தனியாகவோ குழுவாகவோ வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். சிறந்த பெறுபேற்றுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான். தனியார் கல்வி நிலையங்களும் தொடர்பு கொள்ளலாம். (11206)

**077 482 5438**

## பணிப்பெண் தேவை

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள வீடொன்றிற்கு சமையல் வேலை தெரிந்த பணிப்பெண் தேவை.

தொடர்பு (11219)

**071 555 5018**

## VISA SERVICES

கனடா, UK, Germany, France போன்ற நாடுகளுக்கான விசாவினை பெற்றுக் கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

9 வருட கால தமிழ் மக்களின் நம்பிக்கை. (11207)

WINSTAR CONSULTANTS (PVT) LTD
NO.45, Vembadi Street, Jaffna.
T.P : 077 395 0857


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.